மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட கிணறுகளுக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப் பட்டிருந்தால் மின்னிணைப்பு கிடைக்கும். 'சாங்ஷன்' ஆகாமல் இருந்தால் கொடுக்க இயலாது.

புலவர் கா. கோவிந்தன்: அப்படிப்பட்ட விவசாயிகள் 1969 ஆம் ஆண்டிலேயே கடன் வாங்கியும், இன்னும் மின்னிணைப்புக் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக் காவது உடனடியாக மின்னிணைப்பு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அம்மாதிரி இருந்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

தூக்கு தண்டனையை நீக்குதல்.

* 404 வினா—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. துரை கலிமூர்த்தி, திரு. எஸ். கணேசன், திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூக்கு தண்டனையை ஒழிக்கும் யோசனை அரசின் பரிசிலனையில் இருக்கிறதா?

(ஆ) தமிழ்நாடு சிறைகளில் உள்ள ஆயுள் தண்டனைக் குற்றவாளிகளின் எண்ணிக்கை என்ன?

(இ) ஆயுள் தண்டனைக் காலம் என்பது எத்தனை ஆண்டுகள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:

(*a*) No.

(*b*) There are 2,653 life prisoners confined in Tamil Nadu as on 5—11—1977.

(*c*) 20 years.

திரு. எஸ். கணேசன், தலைவரவர்களே, இந்த ஆயுள் தண்டனை என்பது மற்ற மாநிலங்களில் 7 ஆண்டு, 8 ஆண்டு என்று இருப் பதாகச் சொல்லப்படுகிறது. பொதுவாகவே, ஆயுள் தண்டனை பெற்று, சிறைச் சாலைகளில் இருக்கிற குற்றவாளிகள் 4 அல்லது 5 ஆண்டுக் காலத்தில் நேர்மையாளர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்

களாகவும் மாறிவிடுகிருர்கள். எனவே, இந்த அரசு அதைப் பரிசீலனை செய்து, 20 ஆண்டு என்று இருப்பதை குறைக்க நடவடிக்கை எடுக்குமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Regarding the period of imprisonment which is taken into considera-tion by the neighbouring States, this Government has no information. But so far as the policy of this Government is concerned, it is mainly dependent on the attitude of the Centre also. But normally when a man completes 10 years of actual imprisonment excluding remissions, this Government always considers their eligibility and claim for release on the recommendation of the Advisory Board.

(முற்பகல் 9-10)

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, சட்டங்கள் கடுமையாக இருந்தால்தான் சட்டம் ஒழுங்கு (Law and Order) காப்பாற்றப்படும் என்பதும், பொதுமக்கள் அச்சமின்றி நிம்மதியாக வாழ்வார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அது உண்மையா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: We believe in this theory of proportionate punishment to the heinous character of the offence.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இப்போது கொலைக் கைதிகளுக்குத்தான் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. அதேமாதிரி கலப்படம் செய்கின்ற சமூகவிரோத செயல்களைப் புரிபவர்களுக்கும் இவ்வாறு தூக்குதண்டனை விதிக்க சட்டம் கொண்டுவரப்படுமா? ட்ரான்ஸ்போர்ட்டேசன் ஃபார் லைப் என்ற பழைய சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I think this transportation for life has been given up a long time back, and in its place, imprisonment for life has been substituted. I do not think that the modern approach to criminal law would warrant transporting prisoners to the Andamans, or transportation for life will be countenanced by any section of this House.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, ஆயுள் தண்டனை 20 ஆண்டுகாலம் என்று இருப்பதால் அவர்களை ஒரு வருடத்திற்கு ஒரு மாதமாவது பரோலில் விடக்கூடிய முறையில் ஏதாவது இப்போது இந்த அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I think at least this Government has been fairly liberal in granting parole. The suggestion that every year the life imprisonment prisoners, that is what we call the lifers, may be given the benefit of parole, will be considered by this Government on merits.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, ஆயுள் தண்டனை மிக நீண்ட ஆண்டுகளாக இருக்கிறது. அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாவதற்கும் அன்றாட மக்கள் பிரச்சினையில் இணைந்து கொள்வதற்கும் அவர்களைப் பரோலில் விடவேண்டியது அவர்களுடைய அடிப்படை உரிமையாக இருக்கிறது. வெளியே அவர்கள் அப்படி வருவதன் காரணமாக திருந்துவதற்கும் ஒழுக்கம் உள்ளவர்களாக மாறுவதற்கும் ஒரு பாச உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுவதற்கும் வழிவகையாக இருக்கிறது. ஆகவே, அந்த ஆண்டுக்கு ஒரு முறை என்பதை 6 மாதங்களுக்கு ஒரு முறை அவர்களை அனுப்பி, மக்களோடு பழக விட்டு அவர்கள் தவறு செய்கின்றார்களா என்பதைப் பார்த்து அவர்கள் சிறை வாழ்க்கையிலே திருந்துவதற்கு இந்த அரசு வழிவகைகள் காண முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The principle behind punishment is—let us all remember—the prisoner has committed a very serious offence, particularly the lifers. You must also try to view it from the standpoint of the family which loses its breadwinner. If 'X' is murdered and 'X' is the breadwinner, the entire family becomes destitute or decrepit practically. Therefore, viewing from that standpoint, there is some amount of validity in the theory of punishment. Whether parole must be granted every six months, is a matter which will be considered on merits again.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, 1976-ஆம் ஆண்டில் அட்வைசரி போர்டால் பரிந்துரை செய்யப்பட்ட ஆயுட்கால தண்டனைக் கைதிகள் பற்றிய நிலைகள் கவர்னர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் ஒத்தி வைக்கப்பட்டு இருப்பதாகவும் அது மீண்டும்

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் ஆயுட் கால கைதிகள் குறைபட்டுக்கொள்கிறார்கள், இது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அரசு ஏதேனும் ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Government needs notice. A separate question may be put.

வெளி மாநில கைதிகள்.

*405 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நமது மாநிலத்தின் உள்ள சிறைச்சாலைகளில் வைக்கப் பட்டுள்ள வெளி மாநிலத்தைச் சேர்ந்த கைதிகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவர்கள் எந்தெந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:

(*a*) 26.

(*b*)	Andhra Pradesh	4
	Kerala	3
	Karnataka	3
	Maharashtra	3
	Madhya Pradesh	4
	West Bengal	2
	Pondicherry	7
		26

திரு. எஸ். கணேசன்: வேறு மாநிலங்களிலிருந்து இங்கேயுள்ள சிறைச்சாலைகளில் இருக்கக்கூடிய கைதிகள் இந்த மாநிலத்தில் குற்றம் புரிந்தவர்களா அல்லது அந்தந்த மாநில அரசுகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த மாநிலத்தில் காவலில் வைக்கப்பட் டிருக்கிறார்களா? அப்படியானால் அவர்களுக்காகும் செலவுகளை அந்தந்த மாநில அரசு ஈடுசெய்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.